நிறுவனத்தின் பெயர் : மாவட்ட செயலகம், முல்லைத்தீவு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

## இலங்கை பாராளுமன்றின் அரச கணக்குகள் தொடர்பான கணக்குகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட நிலையியற்கட்டளை 119(4) தொடர்பான அவதானிப்பு மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பாராளுமன்றுக்கு சமர்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல – 290

மாவட்ட செயலகம் முல்லைத்தீவு.

| இல | அரச கணக்குகள் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள். | கணக்கீட்டு உத்தியோத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை. | தற்போதைய நிலைமை. |
|---|---|---|---|
| பகுதி 01 : 80 | | | |
| 01 | நிலையான சொத்து பதிவேடு இற்றைப்படுத்தப்படவில்லை மற்றும் இருப்பு திகதி அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை நுகர்வு பொருட்கள் பதிவேடு திகதி அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை. பிணைப்பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படவில்லை. வாகன பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படவில்லை. | அனைத்து பதிவேடுகளும் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிப்பதற்கு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது | அனைத்து பதிவேடுகளும் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகின்றது |
| 02 | கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 171/2004 11.05.2004 இன் படி மென்பொருட்களின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம். கடவுச்சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதத்தில் மாற்றப்படவில்லை. | 11.05.2004 திகதியிடப்பட்ட கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 171/2004 இன் படி மென்பொருட்களின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதத்தில் மாற்றுவதற்கு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது | ஒவ்வொரு மூன்று மாதத்திலும் கடவுச்சொற்கள் மாற்றப்படுகின்றது |

| | | | |
|---|---|---|---|
| 03 | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்க ளுக்கு 01 மாத காலத்திற்குள் பதிலளிக்கப்படாது காணப்பட்டது | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு மாத காலத்திற்குள் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனைத்து உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிவளிக்கப்பட்டுள்ளது. |
| 04 | நி.பி 134(2) இன் பிரகாரம் பொதுகணக்காய்வாளருடன் கலந்தாலோசித்த பின்னர் ஆண்டின் தொடக்கத்தில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படவில்லை. | ஆண்டின் தொடக்கத்தில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் 2023ம் ஆண்டு வருட தொடக்கத்திலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 05 | 26.06.2017 திகதியிடப்பட்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் பந்தி 07 இன் பிரகாரம் 2018ம் ஆண்டு தொடர்பான சொத்துக்கள் கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்துக்கள் கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் ஜெனரல் அலுவலகத்திற்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 26.06.2017 திகதியிடப்பட்ட சொத்துமுகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் பந்தி 07 இன் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது |
| 06 | பயன்பாடற்ற வாகனங்கள் பயன்படற்று 08 மாதங்களுக்குள் அகற்றப்படவில்லை. | பயன்பாடற்ற வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | • ஒரு வாகனம் விற்பனை செய்யப்பட்டுள்ளது<br>• 05 மோட்டர் வாகனங்கள்,01 உழவியந்திரம்,02 வாகனங்கள் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு மாற்றப்பட்டுள்ளது.<br>• மேலும் 02 வாகனங்கள் திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 07 | அனைத்து வாகனங்களினதும் உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் காணப்படவில்லை. | வாகனங்களினது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | • அனேகமான வாகனங்களின் உரிமையானது உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன் உரிய உரிமையாளர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.<br>• 07 மோட்டர் வாகனங்கள்,03 வாகனங்கள்,03லொறி என்பனவற்றின் உரிமைகள் மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கபடல்வேண்டும் இவைகள் சில அரசசார்பற்ற நிறுவனங்களாலும் மற்றும் நீர்பாசன,நீர்வள மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் கையளிக்கப்பட்டவையாகும். |
| 08 | ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவைத்தொகைகள் தீர்க்கப்படவில்லை. | ஒரு வருடத்திற்கு மேலாக அறவிடவேண்டிய ரூபா 157,959.90 னை பதிவளிப்பதற்கான திறைசேரி மற்றும் அமைச்சின் செயலாளரின் அனுமதி 2023 ம் நிதி ஆண்டில் பெறப்பட்டு பதிவளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடவேண்டிய தொகை ரூபா 157,959.90 2023 ம் நிதியாண்டில் பதிவளிக்கப்பட்டுள்ளது. |
| 09 | நி.பி 571 ன் பிரகாரம் காலம் சென்ற வைப்புக்களுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நி.பி 571 ன் பிரகாரம் காணி தொடர்பான வைப்புக்கள் தவிர்ந்த ஏனைய காலம் சென்ற வைப்புக்களுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | • 1-2 ஆண்டுகால வைப்புக்கள் ரூபா. 1,666,580.08 மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்படுகின்றது.<br>• 2-4 ஆண்டுகால வைப்புக்கள் ரூபா. 63,847.20 மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்படுகின்றது. |

| பகுதி 02 : 65 | | | |
|---|---|---|---|
| 10 | நிறுவனம் அதன் நோக்கத்திற்கு பொருந்தக்கூடிய நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை இனங்காண தவறிவிட்டது. | அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு பொருத்தமான நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அதன் நோக்கத்தின் அடிப்படையில் இனங்காண்பதற்கு மற்றும் அதன் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அமைப்பதற்கும் 2023 ம் ஆண்டிலிருந்து அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 11 | இனங்காணப்பட்ட நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு அடையவேண்டிய இலக்குகள் தீர்மானிக்கப்படவில்லை. | இனங்காணப்பட்ட நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. | |
| 12 | நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுமட்டத்தின் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை. | நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுமட்டத்தின் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 13 | 2018 ம் ஆண்டு ஜனவரி 24ம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டம் காணப்படவில்லை. | 2018 ம் ஆண்டு ஜனவரி 24ம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் பிரகாரம் மனிதவள திட்டம் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல் மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 ம் ஆண்டு ஜனவரி 24ம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் பிரகாரம் மனிதவள திட்டம் 2024 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 14 | மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது இருப்பினும் 50% ற்கும் அதிகமான ஊழியர்களுக்கு ஆண்டுக்கு 12 மணித்தியாலயத்திற்கு குறையாத குறைந்தபட்ச பயிற்சி வாய்ப்பையாவது உறுதி செய்யப்படவில்லை. | உத்தியோகத்தர்கள் பயிற்ச்சி பெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களின் தேவைப்படுகளுக்கு ஏற்ற வகையில் பயிற்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் 2024 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| 15 | அனைத்து உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய செயற்திறன் ஒப்பந்தத்தின் வரைவு தயாரிக்கப்படவில்லை அல்லது | அனைத்து உத்தியோகத்தர்களினதும் செயற்திறன் ஒப்பந்ததின் வரைவு தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திறன் ஒப்பந்ததின் வரைவு தயாரிப்பதற்கான அவசியமான நடவடிக்கை 2024 ஆம் ஆண்டிலிருந்து எடுக்கப்படுகின்றது. |
| 16 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு கருத்து மறுக்கப்பட்ட அல்லது சாதகமற்ற கருத்து. | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய தேசிய கணக்காய்வின் மறுக்கப்பட்ட கருத்து மற்றும் சாதகமற்ற கருத்து என்பவற்றை தவிர்ப்பதற்கான அறிவுறுத்தலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தகுதியான கருத்துக்களினை 2022 ஆம் ஆண்டு நிதியாண்டில் தேசிய கணக்காய்விடமிருந்து பெற்றுள்ளோம் |
| 17 | செயல்திறன்இலக்கு குறித்தகாலத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | செயல்திறன் இலக்கு உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | செயல்திறன் இலக்கு சமர்ப்பிப்பதற்கான அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது |
| 18 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% இற்கு குறைவாக காணப்பட்டது.<br>பொது கணக்காய்வு அறிக்கையில் சுட்டிகாட்டப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை | கணக்காய்வு அறிக்கையில் சுட்டிகாட்டப்பட்ட பரிந்துரைகளினை நடைமுறைப்படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது | உத்தியோகத்தர்களின் தேவைப்படுகளுக்கு ஏற்ற வகையில் பயிற்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் 2023 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படுகின்றது. |

.......................
அ.உ.மாமகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
முல்லைத்தீவு.

அ.உமாமகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
முல்லைத்தீவு.

.............................
ம.செல்வரத்தினம்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
முல்லைத்தீவு.

ம.செல்வரத்தினம்
பிரதம கணக்காளர்
அரசாங்க அதிபருக்காக / மாவட்ட
செயலாளருக்காக
மாவட்ட செயலகம், முல்லைத்

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்